03.01.2025

O.S.No.313/2017

வா.சா.1.திரு.ராமர் த.பெ.காத்தட்டி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

எனது தாத்தா குமுடன் கிரையம் வாங்கியதாக சொல்லி வா.சா.ஆ 2 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணமானது அட்டபட்டி கோவில்பட்டியில் இருந்து தற்காலம் கீழையூர் கிராமத்தில் அழகப்பன் அம்பலம் மகன் அழகப்பன் எழுதி கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். அதில் சொத்து விபரத்தில் 248 பட்டாவில் கண்ட சர்வே எண். 392/8, 379/9, ல் கட்டுப்பட்ட சொத்து என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 394/3 ல் கட்டுப்பட்ட சொத்து பட்டா எண் 162 ல் அடங்கியதாக காணப்படுகிறது என்றால் சரிதான். இந்த தாவாவானது சர்வே எண் 379/9 ல் கட்டுப்பட்ட மொத்த விஸ்தீரம் 87 செண்டில் உள்ள சொத்திற்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். பட்டா எண் 248 இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பட்டா எண் 248 தாக்கல் செய்தால் ஆதியில் சர்வே எண் 392/8, 379/9 ல் கட்டுப்பட்ட சொத்துகள் யார் பெயரில் இருந்தது என தெரியவரும் என்றால் சரிதான். அழகப்பன் அம்பலம் எனது தாத்தாவிற்கு விற்பனை செய்ததாக சொல்லப்படும் மேற்சொன்ன 3 இலக்க சொத்துகளில் நான்குமாலில் வீரணன் மகன் அழகப்பன் அம்பலத்திற்கு நாளது தேதியில் கிரையம் கொடுத்த சொத்து என்று ஒருபுறத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் மொத்தம் 87 செண்டில் " நான் அனுபவித்து வருகிற நடுப்புற செண்டு 14 " என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அழகப்பன் அம்பலம் எனது தாத்தாவிற்கு வா.சா.ஆ 2 ஆவணப்படி கிரையம் கொடுத்த தேதியில் 87 செண்டில் நடுப்புறம் 29 ம் செண்டு பாத்தியப்பட்டது என்றாலும், அதில் தென்புறம் 14 செண்டை எனது தாத்தா குமுடனிற்கும் அதே தேதியில் வடபுறம் மீதமுள்ள 15 செண்டை வீரணன் என்ற அம்பலம் மகன் அழகப்பனிற்கும் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வீரணன் என்ற அம்பலம் மகன் அழகப்பன் கிரையம் பெற்ற வடபுறம் 15 செண்டை தான் நான் தற்போது உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்படுவதற்கு முன்னால் அந்த சொத்திற்கு எனது தாத்தா குமுடன் பெயரில் பட்டா இருந்தது. அந்த பட்டா எண் என்ன என்றால் எனக்கு தெரியவில்லை. எனது தாயாருக்கு பட்டா ஏற்படுவதற்கு முன்பு அந்த சொத்தை பொறுத்து ஆதியில் வா.சா.ஆ 2 ஆவணப்படி கிரையம் கொடுத்த அழகப்பன் பெயரிலும், அவரிடமிருந்து கிரையம் பெற்ற வீரணன் என்ற அம்பலம் மகன் அழகப்பனின் சகோதரர் பெயரிலும் பட்டா ஏற்பட்டிருந்தது என்றாலும் குமுடன் பட்டா ஏற்பட்டிருந்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குமுடன் பெயரில் மட்டும் பட்டா இருந்ததா என்றால் சரியல்ல. குமுடன் வகையறா என பட்டா இருந்தது. அதற்குன்டான பட்டா மற்றும் அடங்கலை பார்த்தால் தான் குமுடன் வகையறா யார் யார் என்று தெரிய வரும் என்றால் சரிதான். குமுடன் வகையறா பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் பட்டாவை தாக்கல் செய்தால் அதில் அழகப்பன் பெயர் இருப்பதும்

தெரியவரும் என்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் பிரதிவாதி எங்கள் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எவ்வளவு விஸ்தீரணம் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. ஆக்கிரமிப்பு செய்தது போக மீதமுள்ள சொத்துகள் எனது அனுபவத்தில் இருப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்துகள் தற்போதுவரை எனது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு பாரதிராஜா என்பவருக்கு தாவா சொத்தை 2 செண்ட் விஸ்தீரணத்தை நாங்கள் கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு விற்பனை செய்த விபரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தில் கட்டுப்பட்ட வீட்டை சுற்றிலும் எந்த இடமும் எங்களுக்கு பாத்தியமும் அனுபவத்திலும் இல்லை என்றால் சரியல்ல. தாவா பிராதோடு இணைந்த வா.சா.ஆ 1 வரைபடத்தில் கண்டுள்ள தென்புறம் 6 செண்டாக காட்டப்பட்டுள்ள இடத்தில் தான் 2 செண்டை பாரதிராஜாவிற்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பாரதிராஜாவை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பற்றி அவரது கிரைய ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் அந்த கிரைய ஆவணத்தில் கிரைய தொகையை எனது தாயார் பெற்று கொண்டார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று பாரதிராஜாவிற்கு கிரையம் பதிந்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மூத்த சகோதரி பெயர் வீரம்மாள். எனது தாத்தா குமுடன் கிரையம் வாங்கிய போது தென்புறம் 15 செண்டை கிரையம் பெற்ற அழகப்பன் அம்பலம் மகன் அழகப்பன் என்ற கண்ணையா என்பவருக்கு 2 ம் வாதியான எனது மூத்த சகோதரியை திருமணம் செய்து கொடுத்து பிரிந்து விட்டார்கள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு பஞ்சாயத்தில் கட்டிட அனுமதி பெற்றுள்ளேன் என்றால் இல்லை. பொதுவாக கிராமங்களில் கட்டிட அனுமதி பெற்று வீடு கட்டுவதில்லை என்றாலும், நான் பொய்யான வாதத்திற்காக பிரதிவாதிகள் கட்டிட அனுமதி பெறாமல் வீடு கட்டியுள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருகின்ற இடம் அழகப்பன் அம்பலம் கிரையம் பெற்று அவர்களது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றாலும், அந்த இடத்திற்கும் சேர்ந்து எனது தாயார் பெயரில் UDR ல் தவறுதலாக பட்டா ஏற்பட்டிருப்பதால் அதற்குரிய கிரைய ஆவணங்களை அழகப்பனின் வாரிசுகள் பதிந்து கொடுக்க முடியாத சூழ்நிலை இருந்ததை சாதாகமாக பயன்படுத்தி கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறாக UDR ல் பட்டா ஏற்பட்டதை வைத்து அதன் வழிவகையில் ஏற்பட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்து பரிகாரம் கோரியிருப்பதால் எனக்கு இந்த வழக்கில் உள்ள பரிகாரம் கிடைக்கத்ததக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது தாயாரின் பெயரில் உள்ள சொத்தை மூக்கன் என்பவருக்கு கிரையம் கொடுத்த பின்பு தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாத்தியமோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கு நான்குமாலாக பணையம்மாள் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பணையம்மாளுக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது

என்றால் எனக்கு தெரியாது. அந்த பணையம்மாள் என்பவர் அழகப்பன் அம்பலம் வகையறாவை சேர்ந்த சுந்தரம் என்பவரிடமிருந்து அந்த சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பணையம்மாள் கிரையம் பெற்ற சொத்தின் தெற்கு நான்குமாலாக அழகப்பன் வகையறா இடம் என காட்டப்பட்டுள்ளது என்றாலும், இந்த விபரங்கள் எல்லாம் எனக்கு தெரியும் என்றாலும் இந்த வழக்கிற்காக அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் அழகம்மாள் பெயரில் கிரைய ஆவணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். 1949 முதல் எனது தாயார் பெயரில் பட்டா மாறுதல் ஏற்படும் வரையான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்தால் உண்மை எல்லாம் தெரியவரும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் எனது தாவா தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது வழக்கு சொத்தை பொறுத்து பாரதிராஜாவிற்கு எழுதி கொடுத்த ஆவணம் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.